# நாட்டின் பாதுகாப்பு - இறையாண்மையைக் காப்பதில் என்றும் முன்னணியில் நிற்பது கழகம்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற 'நாடு போற்றும் நானகாண்டு சாதனை' விளக்கக் கருத்தரங்கில் – திருச்சி சிவா எம்.பி. பேச்சு!

**சென்னை, மே 12 -**

**"நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மையை காப்பதில் என்றும் முன்னணியில் நிற்பது கழகம்" என்று சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு, சாதனை விளக்கக் கருத்தரங்கில் பேசிய, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. குறிப்பிட்டார்.**

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

எந்தக் காரணத்தைச் சொல்லியும் இது போன்ற வாய்ப்புகளை தட்டிக் கழித்து விடக் கூடாது என்ற காரணத்தினால் 24 மணி நேரத்தில் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தம்பி சேகர்பாபு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்.

### தனிப்பெரும் பெருமை பெற்றவர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு!

ஒரு வருடம் முழுவதும் கழக நிகழ்ச்சிகளை ஏதாவது ஒரு வகையில் ஏதாவது ஒரு மூலையில் தொடர்ந்து நடத்தும் ஒரு தனிப்பெரும் பெருமை அவருக்கு உண்டு. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர் என்னிடத்தில் சொன்னபோது, சரியாக இந்த மே 7ஆம் தேதி தலைவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் - முதல் கூட்டமாக நீங்கள் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு, நான் இங்கு வந்து இதில் உரையாற்றுகிறேன்.

உரையாற்றக் கொடுத்திருக்கும் தலைப்பில் நான் பேசுவதற்கு முன்பு, வந்திருக்கும் தோழர்களுக்கு இது மிக முக்கியமான காலகட்டம் என்பதால், நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

இந்திய எல்லையில் போர் மேகங்கள்; பாகிஸ்தானோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் உரசல்; தீவிரவாதிகள் அத்துமீறி இந்தியாவிற்குள் நுழைந்து, அப்பாவி பொதுமக்கள் 26 பேரை பலி கொண்டதற்கு, இந்திய அரசாங்கம் தீவிரவாதிகளின் முகாம்களின் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. இதனுடைய தொடர்ச்சி என்ன ஆகும்? என்னென்ன விளைவுகள் ஏற்படும்? என்ற கேள்விகள் அனைத்து திசைகளிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

### தீவிரவாதத்தை ஒடுக்க தமிழ்நாடு துணை நிற்கும்!

நாளைய தினம் நாடாளுமன்றத்தில் டெல்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அரசாங்கம் கூட்டி இருக்கிறது. ஆனால், நான் முதலமைச்சருடைய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டி இருப்பதால், கழகத்தின் சார்பில் நிச்சயமாக நம்முடைய குழு தலைவர்கள் யாராவது பங்கேற்பார்கள். இவ்வாறு ஒரு நிகழ்வு நடைபெறுகிறபோது, முதன்முதலாக அறிக்கை வெளியே வந்தது நம்முடைய முதலமைச்சருடையதுதான். 'இந்திய துணைக் கண்டம் இந்திய நாட்டு அரசாங்கம், தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ்நாடும் தமிழ்நாடு அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் துணை நிற்கும்' என்ற ஒரு தெளிவான அறிக்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்பு, தீவிரவாதிகள் தாக்குதல் நடந்த இரண்டொரு நாட்களில் டெல்லியில் கூட்டம் நடைபெற்றது. அந்த தாக்குதல் நடைபெற்றபோது, நான் ஸ்ரீநகரில் இருந்து கிளம்பி வந்து கொண்டிருந்தேன். என்னை அந்தக் கூட்டத்தில் தலைவர் கலந்து கொள்ள பணித்ததோடு மட்டுமல்ல, அதில் உரையாற்றுகிறபோது, 'இதுபோன்ற இக்கட்டான நேரத்தில் அரசாங்கம் எடுக்கும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு தமிழகம் துணை நிற்கும் என்ற உறுதியினை தாருங்கள்' என்று சொன்னார்.

இதை நான் இப்போது குறிப்பிடுவதற்கு காரணம், டெல்லியில் இருக்கும் அரசாங்கம், தன்னை எதிர்க்கும் கட்சிகள் உள்ள மாநிலங்களை தங்கள் ஆட்சிக்கு ஆதரவு தராதவர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறபோது, அதை எதிர்த்து போர்க்குரல் கொடுக்கிற முதல் குரல், நம்முடைய தளபதியின் குரல்தான்.

ஆனால் அதே நேரத்தில், நாட்டுக்கு ஒன்று என்று சொல்லுகிறபோது, அனைவருக்கும் முன்னால் வந்து இந்த நாட்டை பாதுகாக்க நாங்கள் நிற்போம் என்று சொல்வதும் நம்முடைய கழகத் தலைவர்தான்.

### கூட்டாட்சித் தத்துவத்தின் இணையற்ற பாதுகாவலர்!

அதனால்தான் 'கூட்டாட்சித் தத்துவத்தின் இணையற்ற பாதுகாவலர்' என்ற தலைப்பு எனக்கு தந்திருக்கிறபோது, இது மிகவும் பொருத்தம் என்று நான் கருதுகிறேன்.

நாட்டின் எல்லையில் போர் மேகங்கள். இன்னும் சரியாக 10 மாதத்தில் தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்த தேர்தல் என்பது, எப்போதும் வந்து போகும் தேர்தல் அல்ல. இது ஒரு தத்துவப் போர். தமிழ்நாடு தொடர்ந்து திராவிட மண்ணின் தாக்கத்தின் அதே தொடர்ச்சியில் இருக்கப் போகிறதா அல்லது வேறு எங்கிருந்தோ வந்து நமக்கு ஒவ்வாத கருத்துக்களை சொல்லுகிறவர்கள்; யாருடைய துணையிலாவது எவருடைய முதுகிலாவது ஏறி, இங்கே குழப்பம் ஏற்படுத்த மாட்டோமா என்று அதிகாரத் தோணியோடு வருகிறவர்களும் சந்திக்கின்ற தேர்தல்.

எனவே, நான் எதிரே இருக்கும் தமிழ் சமுதாயத்தைச் சார்ந்த தாய்மார்கள் வீராங்கனைகள் இளைய சமுதாயத்தைச் சார்ந்த பட்டாளத்துச் சிப்பாய்கள் கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வது, இந்த நாடு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில் மகாத்மா காந்தி சொன்னார், 'இளைஞர்கள் யாரும் திருமணம் செய்து கொள்ள வேண்டாம்; கல்லூரிச் சாலைக்கும் பள்ளிகளுக்கும் செல்வதை புறக்கணியுங்கள்; விடுதலைப் பெறும் வரை, வேறு எந்தப் பணியும் உங்களுக்கு முக்கியமில்லை' என்று சொன்னார். அந்த எல்லைக்கு செல்லவில்லை என்றாலும்கூட, சொந்தக் கடமைகளை பார்க்கின்ற அதேநேரத்தில், நம்முடைய மற்ற நேரங்களில் எல்லாம் இந்தத் தேர்தலில் கழகம் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பேற்பதற்கு நாம் அத்தனை பேரும் நம்முடைய பங்கினை ஆற்ற வேண்டும் என்ற உறுதியினை நீங்கள் இன்றைய நிகழ்ச்சியில் தயவு செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பொய்யான குற்றச்சாட்டுகளை புறந்தள்ளும் சீரிய பணி!

ஒரு மாவட்டக் கழகச் செயலாளராக, கழகத்தை வளர்க்கிறார்; பாதுகாக்கிறார். ஒரு அமைச்சராக, ஒரு அரசாங்கத்திற்கு செய்ய வேண்டிய பணிகளை மிகத் தெளிவாக சரியாக செய்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சுமத்தப்படும் பழிகளுக்கு- இவர்கள் ஆன்மீகத்திற்கு எதிரானவர்கள்; இவர்கள் மத நம்பிக்கை உடையவர்களை ஏற்றுக் கொள்வதில்லை என்ற பொய்யான குற்றச்சாட்டுகளை புறந்தள்ளுகின்ற அளவிற்கு சீரிய பணிகளை மேற்கொண்டு இந்த ஆட்சிக்கு பெருமை சேர்த்திருக்கிறவர் தம்பி சேகர்பாபு.

அந்த மாவட்டத்தில் இருக்கும் நீங்கள் எவ்வாறு கழகத்தின் தலைவர், கழகத்தை ஒரு கண்ணாகவும் தமிழ்நாட்டு மக்களை இன்னொரு கண்ணாகவும் கொண்டு இந்த இயக்கத்தையும் நாட்டையும் வழிநடத்துகிறாரோ, அதைப்போல நீங்களும் இந்தத் தேர்தலில் உங்களுடைய பணி என்பது, தேர்தல் நேரத்தில் அல்ல, இன்றிலிருந்தே; நம்முடைய ஆட்சியின் 5வது ஆண்டின் முதல் நாளான இன்றிலிருந்தே நம்முடைய பணி அத்தனையும் மக்களைச் சந்திப்பது கருத்துகளை விளக்குவது மாற்று சிந்தனை கொண்டவர்களை சந்திக்க நேர்கிறபோது, நம்முடைய வாதங்கள் மூலமாக அவர்களின் மனதை மாற்றுவது.

இவ்வளவு சிறப்பாக இதுவரை எந்த ஆட்சியும் திட்டங்களை நிறைவேற்றியது இல்லை. கோரிக்கைகள் வைத்து மதிக்காத ஆட்சிகள் இருந்தது. ஆனால் கோரிக்கைகளே வைக்க அவசியமில்லாமல், யாருக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து அதை நிறைவேற்றுகின்ற ஒரு முதல்வரின் ஆட்சி இன்றைக்கு தமிழ்நாட்டில்.

எனக்கு பின்னால் உரை நிகழ்த்த இருக்கும் 3 பேரும், 3 வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றினாலும், இது அத்தனையும் அவர்கள் நிச்சயமாக தொட்டு பேசுவார்கள். சிலவற்றை விரித்தும் சொல்வார்கள். இந்த ஆட்சியின் சிறப்புகள் செய்திருக்கும் சாதனைகள் அதனால் பயன்பட்டிருப்பவர்கள் யார்? யார்? என்றெல்லாம் அவர்கள் பட்டியலிடுவார்கள்.

என்னுடைய கடமை என்று, கொள்கை வழி நின்று இயக்கம் எப்படி போராடுகிறது என்பதை சொல்ல வேண்டிய பொறுப்போடு நான் இந்த கருத்தரங்கத்தை முதலில் தொடங்கி வைப்பது போன்று உங்கள் முன்னால் நான் இப்போது உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

### இந்தியாவின் சிறப்பே வேற்றுமையில் ஒற்றுமை!

இந்திய துணைக் கண்டத்தின் ஒரு தனிப் பெரும் சிறப்பே, இது ஒரு கூட்டாட்சித் தத்துவத்தை கடைப்பிடிக்கிற நாடு. கூட்டாட்சி தத்துவம் என்றால் என்ன பொருள்? ஒரு நாடு என்று சொன்னால், ஒரு மொழி ஒரு இனம் ஒரு பண்பாடு ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் இருக்கும் நாடுகள் உண்டு. ஆனால் இந்தியா என்பதே, அறிஞர் அண்ணா சொன்னார், தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்கு அவர் நாடாளுமன்றத்தில் பேசுகிறபோது, நாட்டுக்குள்ளேயே நாடா? என்ற ஒரு கேள்வி எழுந்தது. அப்போதுதான் அண்ணா சொன்னார், 'இந்தியாவே ஒரு நாடு அல்ல. அது ஒரு துணைக் கண்டம்.' காரணம், இங்கே பல மொழி பேசுகிறவர்கள் பல இனங்களைச் சார்ந்தவர்கள் பல பண்பாடுகள் உண்டு. அனைவரும் சேர்ந்து வாழ இசைந்து வருகிறோம்.

நம்மிடைய வேற்றுமைகள் இருக்கலாம்; மதத்தால் இனத்தால் மொழியால் பண்பாட்டால் உணவால் உடையால் ஒவ்வொருவரும் மாறுபட்டு இருக்கிறோம். ஆனால் எல்லோரும் சேர்ந்து வாழ ஒன்று சேர்ந்து வருவதைத்தான், 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற தத்துவத்தோடு செயல்படுகிற இந்த நாடு.

அவ்வாறு செயல்படுகிறபோது, ஒன்றியத்தில் இருக்கும் அரசு என்பது, அனைவருடைய முதலாளியும் அல்ல. மாநிலங்களின் தொகுப்புதான் இந்தியா என்ற ஒன்றியம். 'India, that is Bharat, shall be a Union of States' என்று அரசியல் சட்டத்தில் முதல் வரியிலேயே வரும். இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று வரும். அது பற்றி அறிஞர் அண்ணாவிடம் ஒரு முறை கேட்டபோது, 'Union is a Onion' என்று சொன்னார். விளக்கம் கேட்டார்கள். வெங்காயம் என்பதை ஒவ்வொரு இலையாக பிரித்துக் கொண்டே வந்தால், இறுதியில் ஒன்றுமே இருக்காது. பல இலைகள் ஒன்று சேர்கிறபோது, அது ஒரு காயாக வெங்காயமாக மாறுகிறது என்று சொல்வதைப்போல, பல மாநிலங்களின் தொகுப்புதான் இந்திய ஒன்றியமே தவிர, அது தனியாக பிறந்து வந்தது அல்ல.

1947இல் நாம் விடுதலை அடைகிறபோது, இன்றைய இந்தியா கிடையாது. 1950இல் குடியரசாக வரும்வரை இந்தியாவின் ஆட்சி மொழி என்பது, ஆங்கிலமாகத்தான் இருந்தது. இந்தி என்பது கிடையாது. அரசியல் சட்டம் நிறைவேறுகிறபோது நடைபெற்ற விவாதத்தில், இந்தி மட்டுமேதான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று பலர் முன்மொழிந்தபோது, இல்லை ஆங்கிலமேதான் தொடர வேண்டும் என்று வேறு சிலர் வாதிட்டபோது, இரு தரப்பும் சமமாக வந்த நிலையில், ஒரு கட்டத்தில் ஒற்றை வாக்கு வித்தியாசத்தில் இந்தி இருக்கலாம் என்று முடிவெடுத்த நேரத்தில், இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கும்; ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக இருக்கும். 15 ஆண்டுகளுக்குள் நாடாளுமன்றம் எந்தச் சட்டத்தையும் இயற்றாத பட்சத்தில், ஆங்கிலம் என்பது அறவே அகன்று, இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும் என்ற ஒரு பிரிவு அரசியல் சட்டத்தில் உண்டு. இதை உணர்ந்தவர்கள் இந்தியாவின் வேறு எந்தப் பகுதிகளிலும் இல்லை.

நம்முடைய பிரதமரோ உள்துறை அமைச்சரோ அடிக்கடி சொல்வது, நாங்கள்கூட இந்தி பேசாத மாநிலத்தில் இருந்துதான் வருகிறோம் என்று சொல்வார்கள். இந்தி பேசாத மாநிலத்தில் இருந்து வருகிறார்களே தவிர, அவர்கள் இந்திக்கு துணை போகிறவர்கள். இந்தியை தங்கள் தோளிலும் தலையிலும் சுமந்து கொண்டு, அதற்கு மேலாக சமஸ்கிருதத்தை கொண்டு வர வேண்டும் என்று பாடுபடுகிறவர்கள்.



அரசியல் சட்டத்தின் இந்த ஆபத்தான பிரிவை முதலில் உணர்ந்த ஒரே மாநிலம் – தமிழ்நாடு, ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான், 1965இல் மாணவர் போராட்டம் பெரிய அளவில் வெடித்தது. ... ... 1964இல் கீழப்பழுவூர் சின்னச்சாமி என்று தொடங்கி, அது விரிந்தது.

நான் சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நான் இருக்கும் பெருமை மிக்க மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, இதை எதிர்த்து பேசி இருக்கிறார். 'திராவிட நாடு' என்பதை விளக்கிப் பேசி இருக்கிறார். எங்களை நீங்கள் வஞ்சிக்கிறீர்கள் என்பதை, எங்கோ சென்னையில் ஒரு மூலையில் நின்று பேசவில்லை. டெல்லிப் பட்டணத்தில் இந்தியைத் திணிப்பவர்களுக்கு முன்னால், வட இந்திய ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு முன்னால் நின்று, அண்ணா துணிச்சலாக பேசியதன் விளைவு, ஆட்சி மொழி சட்டத்தில் திருத்தம் வந்தது. இன்றைக்கு ஆங்கிலமும் ஆட்சி மொழியாக தொடர்கிறது என்பதற்கு காரணம் நம்முடைய பேரியக்கம்தான்.

நேற்று இரவு எல்லையில் 1.05 மணியிலிருந்து 1.30 மணிக்குள்ளாக, 25 நிமிடங்கள் தாக்குதல் நடந்திருக்கிறது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் என்று ஒரு பகுதி இருக்கிறது. 1965 போரின்போது, பாகிஸ்தான் கைப்பற்றிய சில பகுதிகளை இன்னும் கைவிடவில்லை. அந்த இடத்தில் முகாமிட்டிருக்கும் தீவிரவாதிகளின் முகாம்களை இந்திய நாட்டின் ராணுவம் சென்று தாக்கி, இன்றைக்கு 90 பேரை பலியாக்கி கொண்டிருக்கிறார்கள் என்று பெருமை கொள்கிறோம்.

### மக்களவையில் முழங்கிய பேரறிஞர் அண்ணா!

அந்த நிலைமையை விளக்கி காலையில் வெளியுறவுத் துறை செயலாளர் தொலைக் காட்சியில் பேசுகிறார். நான் காத்திருந்து கேட்கிறேன். கடமை எங்களுக்கு இருக்கிறது. நாளைக்கு சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடக்கலாம் அல்லது நாடாளுமன்ற கூட்டமே நடக்கிறபோது, இது குறித்து பேசலாம். எனவே, நடந்தது என்ன என்பதை ஊடகத்தில் மற்றவர்கள் சொல்வதற்கு முன்பாக நேரடியாக தெரிந்து கொள்ளலாம் என்று கேட்டால், அவர் இந்தியில் அதைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்கிறார்.

நீண்ட நேரம் பொறுமையாகவே இருந்தேன். ஆனால் அடுத்து முடிந்த உடனேயே, அதை ஆங்கிலத்தில் சொல்ல ஆரம்பித்தபோதுதான் புரிந்தது, தி.மு.க. என்ற இயக்கத்தின் தாக்கம், இன்றைக்கு அவர்களை ஆங்கிலத்தில் பேச வைத்திருக்கிறது.

காரணம் என்ன? இந்தி என்பது இந்த நாட்டில் இருக்கும் பலமொழிகளில் அதுவும் ஒன்று. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அந்த மொழி தோன்றி 300 ஆண்டுகளுக்கு உள்ளாகத்தான் ஆகிறது. அதற்கென்று சொந்த எழுத்து வடிவம்கூட கிடையாது. கொஞ்சம் அதிகம் பேர் பேசுகிறார்கள் என்பதற்காக, அதை எங்கள் மீது திணிக்காதீர்கள் என்று சொல்லுகிற உரிமை தமிழ்நாட்டைச் சார்ந்த நமக்கு இருக்கிறது.

இந்தி நமக்கு எதிரி அல்ல; வேறு மொழி பேசுகிறவர்கள் நமக்கு வேண்டாதவர்கள் அல்ல; ஆனால், தாய் மொழியை நகர்த்துவதற்கு அகற்றுவதற்கு அதற்கு மாற்றாக இன்னொன்று வருமேயானால், அது எதுவாக இருந்தாலும் எதிர்த்து நின்று போராடும் கடமை நமக்கு உண்டு.

அது அண்ணா தொடங்கி கலைஞர் வழியாக தொடர்ந்து வீறு கொண்டிருந்தது. இன்றைய கழகத்தின் தலைவர் தளபதி மூலமாக இன்னும் வேகமாக, அது அவர்கள் அஞ்சுகின்ற அளவிற்கு சென்று கொண்டிருக்கிறது.

### இந்தியாவிற்கு வழிகாட்டும் தமிழ்நாடு!

தமிழ்நாட்டில் எழுகின்ற குரலும் எடுக்கின்ற முயற்சிகளும்தான் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கின்றன. எங்களிடம் டெல்லியில் சந்திக்கும் வேறு மாநிலங்களைச் சார்ந்த பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் சொல்வார்கள், 'எங்களுக்கு, உங்களுக்கு கிடைத்த ஸ்டாலினைப்போல ஒரு தலைவர் வேண்டும்' என்று சொல்கிறார்கள். 'ஸ்டாலின்' என்ற பெயர் இன்றைக்கு இந்தியா முழுவதும் எதிரொலிக்கிறது.

ராஜஸ்தான் பாலைவனத்தில் நாடாளுமன்றத்தின் குழு கூட்டத்தின் சில ஆய்வுக்காக பயணம் செய்கிறோம். எதிரே சில பேர் வருகிறார்கள், 'நீங்கள் எல்லாம் யார்?'. 'நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அரசு பயணமாக வந்திருக்கிறோம்'. எந்தெந்த மாநிலங்கள் என்று ஒவ்வொருவரும் சொல்லுகிறார்கள். 'ஒருவர் உத்தரபிரதேசம்; ஒருவர் மேற்கு வங்காளம்; ஒருவர் கர்நாடகா என்று'. 'நான் தமிழ்நாடு' என்று சொன்னவுடன், 'ஓ... ஸ்டாலின் ஆளும் மாநிலமா!' என்று கேட்கிறார்கள். எங்கே? ராஜஸ்தானில்! ராஜஸ்தான் பாலைவனத்தில் தமிழ்நாடு என்று சொன்னவுடன், ஸ்டாலின் ஆளும் மாநிலமா என்று கேட்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியின் பெருமைகள் பரந்து விரிந்து இருக்கின்றன என்பதை கடந்து, இன்றைக்கு இந்தியாவின் உரிமைகளை மாநிலங்களின் உரிமைகளை உயர்த்திப் பிடிப்பதில் முதல் தலைவராக நம்முடைய தலைவர் இருக்கிறார்.

ஒன்றியத்தை ஆளும் பாரதிய ஜனதா கூட்டணி அரசு அது கூட்டணி அரசு; பாரதிய ஜனதா கட்சியின் அரசு அல்ல. நரேந்திர மோடி அவர்கள், பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை இடம்பெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடுகிறார்கள். சட்டமன்ற தி.மு.க. கட்சி குழுத் தலைவராக தி.மு.க.வின் தலைவர் தளபதியை தேர்ந்தெடுக்கிறது என்று தீர்மானிக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை கொண்டு சென்று ஆளுநரிடம் கொடுக்க, நீங்கள் ஆட்சி அமையுங்கள் என்று சொல்வார்கள்.

ஆனால், வேறு ஒரு மாநிலத்தில் மற்ற கட்சிகளை விட ஒரு கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கிறது; ஆனால், ஆளுகின்ற அளவிற்கு பெரும்பான்மை இல்லை என்று சொன்னால், மற்ற கட்சிகளிடமிருந்து ஆதரவு கடிதம் பெறுவார்கள். அந்த ஆதரவு கடிதத்தை கொண்டு சென்று குடியரசுத் தலைவரிடம் கொடுத்தவுடன், அவர் என்ன சொல்வார் என்றால், 'நீங்கள் ஆட்சி அமைக்கலாம். ஆனால், உங்கள் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நீங்கள் நிரூபிக்க வேண்டும்' என்று சொல்வார்கள்.

இப்படி ஒரு இக்கட்டான நிலைமை வந்தால், விவாதம் நடைபெறுகிறபோது பல விஷயங்களை சந்திக்க வேண்டி இருக்கும் என்பதை தவிர்ப்பதற்காக, பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்படாமல், தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் நரேந்திர மோடியே தவிர, அவர் பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் அல்ல.

அப்படிப்பட்டவருடைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் மாநில உரிமைகளைப் பறிப்பதாக மாநில எல்லைக்குள் அத்துமீறுவதாக அரசாங்கம் பின்பற்ற வேண்டிய அரசியல் சட்டம், அதனுடைய மாநில எல்லைக்குள்ளான பிரிவுகளில் எல்லாம் ஊடுருவுகின்ற அளவிற்கு சட்டத்தை இயற்றுகிறார்கள். நாங்கள் அங்கே எதிர்த்து போராடுகிறோம்.

### சிறுபான்மையினரை குறி வைக்கும் ஒன்றிய அரசு!

அனைத்திலும் சிறுபான்மையினரை குறி வைத்து இந்த அரசாங்கம் நடக்கிறது. எதையெல்லாம் பின்பற்ற வேண்டும் என்று, அரசியல் சட்டம் சொன்னது, இந்தியா என்பது மதச்சார்பற்ற நாடு. இதுதான் அடிப்படை கோட்பாடு. மதச்சார்பற்ற என்றால் என்ன? மதம் இல்லை என்பது அல்ல; மதங்கள் இருக்கும் சமயங்களை பின்பற்றுபவர்கள் இருப்பார்கள் – ஆனால், அரசாங்கத்திற்கு எந்த சமயமும் இருக்காது. இது மதச்சார்பற்ற அரசு என்கிற போது அனைவரையும் ஒரே கண்ணோடு பார்க்க வேண்டும்; ஒரே கண்ணோட்டத்தோடு நடத்த வேண்டும்.

பாகிஸ்தான் இஸ்லாமிய நாடு. இலங்கை பௌத்த மத நாடு. வேறு சில நாடுகள் கிறிஸ்துவ மதத்தை பின்பற்றும் நாடுகள். ஆனால் இந்தியா என்கிற நாடு, மதச்சார்பற்ற நாடு. ஆனால் இந்த ஆட்சி செய்கிற காரியங்கள் அனைத்தும் சிறுபான்மையினரை குறி வைப்பதாக, குறிப்பாக இஸ்லாமியர்களை குறி வைப்பதாக இருக்கிறது.

பல நேரங்களில் நாங்கள் சொல்லி இருக்கிறோம். இந்த நாட்டில் அனைவரையும் கண்ணென காக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமே தவிர, யாரையும் புறக்கணிக்க கூடாது என்று. அப்படிப்பட்ட இன்னல்கள் உருவாகும் நேரத்தில் எல்லாம், மற்றவர்கள் பேசுவார்கள்; அது அடங்கிச் செல்லும். ஆனால் உரிமைக் குரலாக ஒலிப்பது, தமிழ்நாட்டில் நம்முடைய தலைவரின் குரல் மட்டும்தான்.

### நமது தலைவரின் உரிமைக் குரல்!

அண்மையில் நிறைவேற்றப்பட்ட வக்பு திருத்தச் சட்டத்திலிருந்து அதற்கு முன்னால் குடியுரிமை திருத்தச் சட்டத்திலிருந்து முத்தலாக் சட்டத்திலிருந்து, அவர்களை நோக்கி குறி. அடுத்தது, கிறிஸ்தவ மதத்தை நோக்கி செல்லும். எப்போது 'பொது சிவில் சட்டம்' வருகிறதோ, அப்போது அனைத்து சிறுபான்மையினரும் பாதிக்கப்படுவார்கள். நாங்கள் பல நேரங்களில் கேட்டோம். தளபதியின் குரல் அது; கழகத் தலைமையின் குரல் அது.

இந்த நாடு 1947இல் பிரிவினையை அடைந்து, பாகிஸ்தான் – இந்தியா என்று பிரிந்தபோது, பாகிஸ்தான் உருவாக காரணமாக இருந்த முகமது அலி ஜின்னா சொன்னார், 'நான் இஸ்லாமியர்களுக்கு என்று ஒரு நாடு உருவாக்குகிறேன். முஸ்லிம்கள் எல்லாம் என்னோடு வாருங்கள்' என்றபோது, இங்கிருந்த முஸ்லிம்கள் சொன்னார்கள், 'நாங்கள் இஸ்லாமியர்கள்தான். ஆனால், இந்தியா தான் எங்கள் நாடு' என்று இங்கே தங்கினார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டிய கடமை யாருக்கு இருக்கிறது? இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது.

இன்னும் சொல்வோம், பகல்ஹாமில் நடைபெற்ற தீவிரவாதிகளின் தாக்குதல். அந்தத் தாக்குதலை அனைவரும் கண்டித்த போது, இங்கிருக்கும் இஸ்லாமியர்களும் சேர்ந்துதான் கண்டித்தார்கள். மதத்தின் பெயரால் இந்தத் தாக்குதலை நாங்கள் நியாயப்படுத்த மாட்டோம் என்று.

எனவே, என்ன காரணத்திற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இந்தியா என்கிற போது நாம் அனைவரும் ஒன்றாக வேண்டும். அதற்கு மாறாக பல காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொல்லுகிறபோது, துணிச்சலாக இன்றைக்கு ஒலிக்கிற குரல் நம்முடைய தலைவரின் குரல்.

### மாநில சுயாட்சி நாயகர்!

அண்மையில் நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 'மாநில சுயாட்சி நாயகர்' என்ற ஒரு நிகழ்ச்சியை நீங்கள் கண்டு களித்திருப்பீர்கள். அதுதான் உச்சகட்டம். ஒரு மாநில அரசுக்குதான், அந்த மாநிலத்து மக்களுக்கு என்ன தேவை என்பது தெரியும். அவர்கள் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்களை தீட்டுவதோ, சட்டங்களை இயற்றுவதோ, அந்த மாநில அரசுக்கு மட்டும்தான் உரிமை உண்டு.

உதாரணத்திற்கு சொல்லலாம். நான் 50 ஆண்டு காலமாக சென்னைக்கு வருகிறேன்; கூட்டங்களில் பேசுகிறேன். ஆனால், எனக்கு இந்தப் பகுதியில் வாழ்பவர்களின் தேவை என்ன என்பது எனக்கு தெரியாது. நான் வந்து செல்பவன். உங்களுக்கு என்ன தேவை என்பது, சேகர்பாவுக்குத்தான் தெரியும். உங்களுக்கு என்ன தேவை என்பது, இங்கிருக்கும் பகுதிச் செயலாளர் முரளிக்குதான் தெரியும். அதுபோன்று, தமிழ்நாட்டுக்கு என்ன தேவை என்பது, அதை ஆளுகின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பலத்தோடு முதல்வராக இருக்கும் எங்களுடைய தலைவருக்குத்தான் தெரியுமே தவிர, டெல்லிப் பிரதிநிதிக்கு அல்ல; டெல்லியில் ஆளுகிறவர்களுக்கு அல்ல.

அவர்கள் எங்களை கலந்து பேசிதான் எதையும் செய்ய வேண்டும். நாங்கள் செய்வதற்கு துணை நிற்க வேண்டும். ஆனால், நாம் நிறைவேற்றுவதற்கு எல்லாம் அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நிதி தர மாட்டோம்; நமக்குத் தர வேண்டியதை தர மறுக்கிறார்கள்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு தருவது, 9.69 விழுக்காடு. இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறோம். அது வளர்ச்சி. உதாரணத்திற்கு சொன்னால், 100 ரூபாய் இந்தியாவின் வருமானம் என்றால், அதில் 9.69 விழுக்காடு ரூபாய் தமிழ்நாடு தருகிறது. நமக்கு திருப்பித் தருவது எவ்வளவு தெரியுமா? வெறும் 4 ரூபாய்தான். ஆனால், பீகார் மாநிலம் வெறும் ரூ.2.75 தருகிறது. அவர்களுக்கு 16 ரூபாய் திருப்பித் தருகிறார்கள். உத்தரபிரதேசம் வெறும் 8 ரூபாய்தான் தருகிறது. அவர்களுக்கு 20 ரூபாய் திருப்பித் தருகிறார்கள்.

நான் சுருக்கமாக சொல்கிறேன், நாம் வஞ்சிக்கப்படுகிறோம். சட்டப்பேரவை ஒருமனதாக நிறைவேற்றும் சட்டங்களை கிடப்பில் போடுகிறார் ஆளுநர். அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று சொல்கிறோம். கேட்க மறுக்கிறார்கள். முடியாது என்று திருப்பி அனுப்பலாம்; ஒருவேளை சட்டமன்றம் மீண்டும் திருப்பி அனுப்பினால், அவர் கையெழுத்திட்டாக வேண்டும்; ஆனால் இரண்டையும் செய்வதில்லை. உள்ளே வைத்து அவர் பூட்டி வைத்திருந்ததை, கேட்டுப் பார்த்தோம்; சொல்லிப் பார்த்தோம்; போராடிப் பார்த்தோம்; முறையிட்டுப் பார்த்தோம்; டெல்லியிலும் சொல்லிப் பார்த்தோம்; அனைத்திலும் முறையிட்டு பார்த்தும் முடியவில்லை. இறுதி புகலிடம் நீதிமன்றம் என்று சென்று, நம்முடைய தலைவர் ஒரு பெரிய உரிமையை பெற்றுத் தந்திருக்கிறார்.

### மாநில உரிமைக்காக நாம் செய்கிற காரியம்!

ஒன்றை மறந்து விடாதீர்கள். இதுதான் உச்சகட்டம். ஒருவர் செய்கின்ற ஒரு காரியம் இந்தியா முழுவதற்கும் சென்று சேர வேண்டும். தலைவர் கலைஞர் சொல்வார் அல்லவா, 'ஆகாரத்துக்காக அழுக்கை தின்று, தடாகத்தை சுத்தம் செய்கிறதே மீன்; அதன் சுயநலத்திலும், பொதுநலம் இருக்கிறது' என்று. இது சுயநலம் அல்ல; நம் மாநிலத்தின் உரிமைகளுக்காக நாம் செய்கின்ற காரியத்தின் பலன், இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று சேருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல்வராக இருக்கிறார். அதுவரை யாருக்கும் தோன்றாத சிந்தனை அவருக்குத்தான் வந்தது. 2 முக்கியமான நாள் இந்த வரலாற்றில் உண்டு. ஒன்று குடியரசு தினம், இன்னொன்று விடுதலை பெற்ற சுதந்திர தினம். இன்று 2 நாட்களின்போதும் அரசு விடுமுறை. அனைத்து இடங்களிலும் கொடியேற்றி மகிழ்ச்சியாக கொண்டாடுகிறோம். சுதந்திர தினம் என்பது, அந்நியனிடமிருந்து நாம் விடுதலையான நாள். குடியரசு தினம் என்பது, நம்மை நாமே ஆள்வதற்கு நாம் முடிவெடுத்துக் கொள்கின்ற நாள்.

இந்த நிலையில் ஒரு காலகட்டம் வரை என்ன நடந்தது தெரியுமா... சுதந்திர தினத்தின்போது, டெல்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் கொடியேற்றுவார். செங்கோட்டையில் பிரதமர் கொடி ஏற்றுவார். மாநிலங்களில் இந்த 2 தினங்களிலும் ஆளுநர்கள்தான் கொடி ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

கலைஞர்தான் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையாரிடம் சொன்னார், 'குடியரசு தினத்தின்போது, அங்கே குடியரசுத் தலைவர் கொடியேற்றுகிறார்; இங்கே ஆளுநர்கள் கொடி ஏற்றுகிறார்கள். நியாயம். ஆனால், சுதந்திர தினத்தின்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் கொடியேற்றுகிறார் என்றால், மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்தானே கொடியேற்ற வேண்டும்' என்று சொல்கிறார்.

அதிலிருந்த நியாயத்தை புரிந்து கொண்ட அம்மையார் இந்திரா காந்தி, 'சரி' என்று இசைவு தெரிவித்து, அதை ஆணையாக பிறப்பித்து, சரித்திரத்தில் முதன்முதலாக செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தலைவர் கலைஞர் கொடியேற்றுகிறபோது, அதே நாளில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் முதலமைச்சர்கள் கொடியேற்றினார்கள்.

### சரித்திரச் சாதனை!

அதேபோல, இன்றைய முதலமைச்சர் உச்சநீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வருகிறார். மாநில சட்டப்பேரவை ஒரு மனதாக நிறைவேற்றும் சட்டங்களை மக்களுக்கான சட்டங்களை கையெழுத்திட வேண்டிய ஆளுநர், குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி அனுப்ப வேண்டும்; அவ்வாறு திருப்பி அனுப்பி மீண்டும் வந்தால், கையெழுத்திட வேண்டுமே தவிர, அதை கிடப்பில் போடுவதற்கு உரிமை கிடையாது; அவ்வாறு கிடப்பில் வைத்தால், நீதிமன்றமே அரசியல் சட்டம் தந்திருக்கும் உரிமையின் அடிப்படையில், அவர்கள் நிறைவேற்றியதை எல்லாம் சட்டமாக்கும் என்ற சரித்திர சாதனை.

நான் சிலிர்த்துப் போனவனாக பேசுகிறேன். ஒரு மாநில சட்டப்பேரவை நிறைவேற்றியதற்கு கையெழுத்திட வேண்டிய ஆளுநர் மறுத்தபோது, நீதிமன்றம் சொல்கிறது, 'நாங்கள் அத்துமீறி அல்ல; உரிமைகளைக் கடந்து அல்ல; இன்னொருவர் அதிகாரத்தை பறித்து அல்ல; அரசியல் சட்டம் உச்சநீதிமன்றத்திற்கு தந்திருக்கும் அதிகாரத்தின்படி, அவர்கள் நிறைவேற்றியதை சட்டமாக இந்த நீதிமன்றம் அறிவிக்கிறது' என்று சொல்லி, நிலுவையில் நின்ற 10 மசோதாக்கள் சட்டமாகி, இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் வேந்தர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள். இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களும் அங்கிருக்கும் பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக பொறுப்பேற்கிறார்கள்.

எப்படி கலைஞர் கொடியேற்றி வைக்கும் உரிமையை அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் பெற்று தந்தாரோ, அதுபோல இன்றைக்கு நீங்கள் நிறைவேற்றுகிற சட்டங்கள் தானாகவே சட்டமாகும். ஆளுநர் கையெழுத்திட வேண்டும்; இல்லாவிட்டால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க வேண்டும் என்ற சட்டத்தை உத்தரவை, சேகர்பாபு சொல்லவில்லை; தமிழ்நாட்டின் முதலமைச்சர் சொல்லவில்லை; உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

### சட்டம்தான் அனைத்திலும் உயர்ந்தது!

நீதிமன்றம், சட்டங்களை இயற்றும் மன்றம் இவர்களுக்கெல்லாம் தனி மரியாதை உண்டு. 'Separation of Powers' என்று சொல்வார்கள். Executive, Legislature & Judiciary. 'Executive' என்பது நிர்வாகம். 'Legislature' என்பது நாங்கள் இப்போது இருக்கும் அவை போன்று சட்டங்களை இயற்றுகின்ற மன்றம். நீதிமன்றம் அந்த சட்டங்கள் சரியா? இல்லையா? என்று பார்க்க வேண்டியது.

ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் ஒரு கேள்வி வரும். இந்த மூன்றில் எது உயர்ந்தது? குடியரசுத் தலைவரா? நாடாளுமன்றமா? நீதிமன்றமா? என்றால், அதனுடைய பதில்: இதில் எதுவும் இல்லை, அரசியல் சட்டம்தான் அனைத்திற்கும் உயர்ந்தது. 'The Guiding Force'.

நாடாளுமன்றம் சட்டம் இயற்றினால், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இயற்ற வேண்டும்; நிர்வாகம், எதைச் செய்தாலும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே செய்ய வேண்டும்; அதேபோல, அனைத்தும் அரசியல் சட்டத்திற்குள் இருக்கிறதா என்று உயர்நீதிமன்றமோ உச்ச நீதிமன்றமோ பார்க்க வேண்டும்.

எனவே, அவ்வளவு சிறப்பான ஒரு அரசியல் சட்டத்தை இந்த நாட்டில் பெரும் அறிஞர்கள் உட்கார்ந்து 3 ஆண்டுகள் விவாதித்து நம் கையில் தந்துவிட்டு சென்றிருக்கிறார்கள். அண்ணல் அம்பேத்கர் தலைமையில் வரைவு செய்யப்பட்ட அந்த அரசியல் சட்டம் நம் கையில் இருக்கிறது. அதன் அடிப்படையில் தான் இன்றைக்கு நீதிமன்றம் அரசியல் சட்டத்தை காத்து, மாநில உரிமைகளை உயர்த்திப் பிடித்திருக்கிறது. ஆனால் அது அத்தனைக்கும் காரணம், ஒரு தலைவர் நம் தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர். நம்முடைய தலைவர் என்பதற்காக உயர்த்தி பேசுகிறோம் என்பதல்ல, நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்கட்டும்.

### உரிமைகளை பாதுகாக்கும் நமது அரசு!

யாருடைய ஆட்சியில் இவ்வாறு கேட்காமலேயே திட்டங்கள் அணிவகுத்து தொடங்குகின்றன. யாரை நாங்கள் கருதாமல் இருக்கிறோம்; தாய்மார்கள் பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள் மாணவர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் தொழில் செய்கிறவர்கள், இவ்வாறு அனைத்து தரப்பினரையும் பார்த்து பார்த்து அவர்களுக்கு திட்டங்களை தீட்டுகிற ஒரே அரசு என்பதோடு மட்டுமல்ல, உரிமைகளை பாதுகாக்கிறோம்; அதே நேரத்தில் இந்த நாட்டுக்கு ஏதாவது ஆபத்து என்றால், நாங்கள் இருக்கிறோம் என்று முன்னால் வந்து நிற்பதும் நாம்தான்.

தம்பி அப்துல்லா ஒரு நாள் நாடாளுமன்றத்தில் பேசுகிறபோது, அவருடைய வார்த்தை தவறாக புரிந்து கொள்ளப்பட்டு, தி.மு.க.வை தீவிரவாத கட்சி என்பதைப்போல அங்கே விமர்சித்தார்கள். கடுமையான கொந்தளிப்பு.

நான் குறுக்கிட்டு பேசினேன். என்னை பேச அனுமதித்தார்கள். நான் சொன்னேன், 'ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள். தி.மு.க.வை பிரிவினைவாத கட்சி என்று எந்த காலத்திலும் சொல்லாதீர்கள். நாங்கள் திராவிட நாடு கேட்டது உண்மை. ஆனால் அந்தக் கோரிக்கையை கைவிட்டோம். அது கோரிக்கை அல்ல, எங்களது கொள்கை; எங்கள் உயிர்; நாங்கள் நினைத்தது.

ஆனால் எப்போது கைவிட்டோம் தெரியுமா... இந்தியாவின் மீது சீனா படையெடுத்தபோது, தம்பி வீடு இருந்தால்தான் ஓடுமாற்ற முடியும் என்று சொல்லி, ஒரு கொள்கையை கொடுத்து, இயக்கத்தையும் நாட்டையும் அண்ணா காக்க வந்தார். பங்களாதேஷ் யுத்தத்தின்போது, உத்தரபிரதேச போன்ற பெரிய மாநிலங்கள்கூட தராத அளவிற்கு 6 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்தவர் தமிழ்நாட்டில் முதலமைச்சர் எங்கள் தலைவர் கலைஞர்.

அனைத்து நேரங்களிலும் நாங்கள் இப்படித்தான் இருப்போம். எங்களை கொச்சைப்படுத்த வேண்டாம்' என்று பேசியபோது, 'மாநில உரிமைகளை காக்க போராடுவோம். ஆனால் இந்த நாடு என்று வருகிறபோது, எங்களைப்போல அதை பாதுகாக்கிறவர்கள் எவரும் இல்லை' என்று சொன்னதை கேட்டார்கள். அமைதியானார்கள்.

இன்றைக்கும் அதுதான் நிலைமை. 'உரிமைகளுக்கு குரல் கொடுக்கிறோம் உறவுக்கு கை கொடுக்கிறோம்'. தீவிரவாதிகள் முகாம்கள் மீது தாக்குதலா... நீங்கள் எடுத்த நடவடிக்கை சரி. நீங்கள் தீவிரவாதிகள் மீது தொடுக்கும் தாக்குதல் எதுவாக இருந்தாலும், அதற்கு இந்த தமிழ்நாடு துணை நிற்கும் என்ற பொறுப்புமிக்க முதலமைச்சர்.

மாநிலங்களின் உரிமைகளை உயர்த்திப் பிடிக்கிறார்; கூட்டாட்சி தத்துவத்தை பாதுகாக்கிறார்; நாட்டு மக்களுக்கு நன்மை செய்கிறார்.

### நம் முதல்வரின் ஆட்சி தொடர வேண்டும்!

ஒரு கட்சியின் தலைவனாக ஒரு கொள்கையின் காவலனாக ஒரு மக்களின் பாதுகாவலனாக ஒரு தலை சிறந்த தலைவனாக இன்றைக்கு பரிணமித்து நிற்கிற நம் முதல்வரின் ஆட்சி, இன்னும் தொடர வேண்டும் என்பதுதான் நம் முழக்கம்.

'நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு' என்று சொல்வது, அவர் முதலமைச்சராக வேண்டும் என்ற சுயநலம் அல்ல; இவர் அமைச்சராக இருக்க வேண்டும் என்பதல்ல; மற்றவர்கள் அனைவரும் பதவியில் இருக்க வேண்டும் என்பதல்ல; இந்த கட்சி ஆட்சியில் இருந்தால், மக்கள் எல்லாம் நலமுடன் வாழ்வார்கள்.

காவலன் கண் விழித்திருந்தால், கள்வன் பயம் இருக்காது. காவலனே கள்வனாகிவிட்டால், மக்களுக்கு நிம்மதி இருக்காது. தி.மு.க. நல்ல காவலன்; கண்விழித்து உங்களை பாதுகாக்கும். இந்த இயக்கத்தை பாதுகாக்கின்றார்கள். எதிர்காலம் ஒளிமயமாகும்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேசினார்.